மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 956 முதல் 960 வரை மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

குச்சிவள்ளிக் கிழங்கு மாவிலிருந்து சாராவி தயாரிக்கும் திட்டம்.

*வினா எண். 961.—டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குச்சிவள்ளிக் கிழங்கு மாவிலிருந்து எதில் ஆல்கஹால் (Ethyl Alcohol) தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) மத்திய அரசு அதற்கு அனுமதி அளித்து விட்டதா?

(இ) ஆம் எனில், அந்தத் தொழிற்சாலை இராசிபுரத்தில் ஆரம்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) இல்லை.

(ஆ) and (இ) கேள்விக்கு இடம் இல்லை.

இந்தியா மீட்டர்ஸ் நிறுவனம்.

*வினா எண். 962—திரு. ஜே. சி. டி. பிரபாகரன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்தியா மீட்டர்ஸ் நிறுவனம் தற்போது யார் பொறுப்பில் இயங்கி வருகிறது?

(ஆ) அரசு இந்த நிறுவனத்தை ஏற்று நடத்த உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பில் இயங்கி வருகிறது.

(ஆ) உத்தேசம் ஏதும் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. ஜே. சி. டி. பிரபாகரன்: இப்போது இந்த 'பெல்' நிறுவனத்தை ஏற்று நடத்திவருகிற அந்த ஒப்பந்தம் செப்டம்பர் 21-டன் முடிவடைவதாகத் தெரிகிறது. செப்டம்பர் 21-க்குப் பிறகு மீண்டும் அந்த பெல் நிறுவனத்தை ஏற்று நடத்த உத்தேச மில்லை என்று தெரிவித்தால் அதை அரசு பரிசீலனைக்கு ஏற்று அங்கிருக்கிற தொழிலாளர் பெருமக்களுடைய கோரிக்கையாக வைத்திருக்கிற அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை அரசாங்கம் ஏற்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: அரசாங்கமே ஏற்று நடத்துமா என்ற கேள்விக்கு அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை என்று ஏற்கெனவே சொல்லிவிட்டேன். நலிவுற்றிருந்த அந்தத் தொழிற்சாலையை எடுத்து நிவாரணம் தேவைப்படுகிற நிறுவன மாக அறிவித்து அரசாங்கம் வேண்டிய உதவிகளை செய்து வந்தது. இடபோது 1978–79இல் ரூ. 2·27 இலட்சமும், 1979–80 இல் ரூ. 10.33 இலட்சமும், அந்த நிறுவனம் இலாபம் ஈட்டியிருக் கிறது. 1980–81 இல் ரூ. 30 இலட்சம் வரை இலாபம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, இந்த நிறுவனத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்கிற பிரச்னை இப்போது எதுவும் இல்லை.

திரு. ரா. உமாநாத்: இந்த பெல் நிறுவனத்தை எடுப்பதற்கு முன்பாக தனியார் துறையில் இருக்கும்போது அவர்களுக்குள்ளே ஏராளமான சண்டைகள் நடந்து அதற்குள் கொள்ளை அடித்து அதை க்ளோஸ் செய்து அதனால் உற்பத்தியும் தொழிலாளர் களும் பாதிக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியும். அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற கணக்கில் இருந்து உற்பத்தியும் சரி, 600-க்கு மேற்பட்ட தொழிலாளர்களும் சரி, இலாபமும் சரி, அதிகரித்துக் கொண்டு வருகிறது என்று பார்க்கக்கூடிய நேரத்தில் ஒரு குறிப்பிட்ட கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன். நீங்கள் 'டேக் ஓவர்' செய்ய உத்தேசமில்லை என்று சொன்னீர்கள். இப்போது லீஸில்—லீஸ் அல்லது ஏதோ ஒன்றில்—அந்த பெல் நிறுவனம் நடந்து கொண்டிருக்கிறது. அதன் காலக்கெடு செப்டம்பரில் முடிவடையப் போகிறது. மீண்டும் அந்த நிறுவனம் ப்ரைவேட் ஹான்ட்ஸ்க்குப் போனால் அந்தத் தொழிலாளர்களின் வேலை போய்விடும் என்ற பயம் இருப்பதால் அரசாங்கம் அந்த லீஸை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிக்கவேண்டும் என்று சொல்லி ஏதாவது ரெப்ரஸென்டேஷன் வந்ததுண்டா? அப்படி யானால் அந்த ரெப்ரஸென்டேஷன் பேரில் அந்த லீஸை நீட்டிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பொதுவாக ஒரு நிறுவனம் அல்லது தொழிற்சாலை நலிவுறுகிறபோது அரசாங்கம் தேவையான உதவிகளைச் செய்து அந்த நிறுவனத்தைச் சீரமைப் பதற்கும் அது இலாபகரமாக ஓடுகிற நிலைக்கு வந்ததற்குப்

பின்னால், முன்னால் அதை வைத்து இருந்தவர்களிடம் திருப்பி ஒப்படைப்பது வழக்கமாக இருக்கிறது. இது வாடிக்கையான ஒன்று தான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரிலும் சொல்லியிருக்கிறார்கள், இப்போதும் கேட்டிருக்கிறார்கள். இது 20-9-1981 நோடு நலிவுற்ற நிறுவனமாக இருக்கக்கூடிய அந்த காலவரம்பு முடிவடைகிறது. தொழிலாளர்களிடமிருந்து ரெப்ரஸென்டேஷன் என்னிடம் வந்ததாகத் தகவல் இல்லை. அப்படி வருமானால் அதன் மெரிட்டின் அடிப்படையில் இந்தப் பிரச்னை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 963 முதல் 966 வரை மாண்புமிகு ஆதித்திராவிடர் நலத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) தி.மு.க. உறுப்பினர்கள் அவைக்கு வராதது.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாமன்றத்தின் பிரதான எதிர்க்கட்சியாக இருந்து வரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் இன்றைக்கு இந்த மாமன்றத்தின் நடவடிக்கைகளில் பங்கு கொள்ள வரவில்லை. அது சம்பந்தமாக பேரவைத் தலைவர் அவர்களுக்கு ஏதாவது எழுதி இருக்கிறார்களா? பேரவைத் தலைவர் அவர்கள் அவர்களோடு சேர்ந்து பேசி ஒரு சுமுகமான நிலையை உருவாக்கி அவர்கள் நாளை முதலாவது இம் மாமன்றத்தின் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதுபற்றி விவ திப்பதற்காக எல்லாக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நான் இன்று 12 மணிக்குக் கூட்ட இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு ஏ. சாகுல் ஹமீது: தலைவரவர்களே, பிரதான எதிர் கட்சி இல்லாத நிலையில் இந்த அவையை நடத்திச் செல்வது ஜனநாயக ரீதியில் முறையாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இத்தனை எதிர்கட்சிகள் இருக்கும் பொழுது, நீங்களும் இருக்கும் பொழுது சபையை நடத்தலாம். மாண்புமிகு சாகுல் ஹமீது அவர்களுக்குச் சொல்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கடிதத்தை